## சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**கணிதம் - தரம் 02 / இரண்டாந் தவணை – வாரம் 9**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

**<u>10.1 : நேரம் கழிவதை இனங்காணல்.</u>** நிமிடம், மணி, நாள், வாரம், மாதம் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்புகளை அறிந்து கொள்வார்.

I. ஒரு நிகழ்வுக்காக கழியும் நேரம் ஆளுக்கு ஆள் வேறுபடும் என்பதை உணரச் செய்க.
   - ❖ பூக்கள், ஈர்க்குகளை எடுத்துக் கொண்டு பிள்ளையுடன் இன்னும் ஒருவரை சேர்த்துக் கொண்டு, ஈர்க்கில் பூக்களைக் கோர்க்கச் செய்க. (பூக்கள் 10உம், ஈர்க்குகள் 2உம் வழங்குக.)
   - ❖ முதலாவதாக பூக்களைக் கோர்த்தவருக்கு குறைந்த நேரம் செலவாகியுள்ளது என்பதையும், அடுத்தவருக்கு முதலாவது ஆளை விட கூடிய நேரம் செலவாகியுள்ளது என்பதையும் விளங்கிக் கொள்ள வழிப்படுத்துங்கள்.

II. ஒரு குறிப்பிட்ட தூரத்தை அடையாளமிட்டுக் கொள்க.
பிள்ளையுடன் இன்னும் ஒரு பிள்ளையையும் சேர்த்து இருவரையும் ஆரம்பிக்கும் இடத்திலிருந்து ஓடச் செய்க. முதலில் ஓடி வந்தவருக்கு குறைவான நேரமும், இரண்டாவதாக வந்தவருக்கு கூடிய நேரமும் கழிந்துள்ளமையை விளங்கிக் கொள்ள வழிப்படுத்துக.

III. பாடநூலில் ஒரு சிறு பந்தியை ஒருவர் வாசிக்கும்போது, மற்றையவர் 1, 2, 3, 4 என எண்ணுவதற்கும், பின்னர் மற்றையவர் வாசிக்க முதலாமவர் 1, 2, 3, 4 என எண்ணுவதற்கும் வாய்பை வழங்கி, யாருக்கு கூடுதலான நேரம் செலவானது எனவும், குறைவான நேரத்தில் வாசித்தவர் யார் எனவும் அறிந்து கொள்ள வழிப்படுத்துங்கள்.

IV. தூவரமிடப்பட் சிரட்டை, உலர்ந்த மணல், வெற்று ஜாம் போத்தல்கள், எண்ணிகள் ஆகியவற்றை எடுத்துக் கொள்க.
   1). பிள்ளையை ஜாம் போத்தல் வாயின் மீது சிரட்டையை வைத்து அதனுள் மணலை நிரப்பச் செய்து மற்றைய பிள்ளையை எண்ணிகளை ஒவ்வொன்றாக எண்ணி எடுக்கச் செய்க. ஜாம் போத்தல் நிறைந்ததும் நிறுத்தச் செய்து எண்ணிகள் எத்தனை என குறித்துக் கொள்க.
   2). மற்றைய பிள்ளையை அவ்வாறே ஜாம் போத்தலில் மணலை நிரப்பச் செய்து, எண்ணிகளைக் கொண்டு எண்ணி முடித்ததும் குறிக்கச் செய்து, யார் குறைவான எண்ணிக்கையில் மணலை நிரப்பியுள்ளார்? யார் கூடிய எண்ணிக்கையில் மணலை நிரப்பியுள்ளார் என்பதையும் அதிக நேரம், குறைவான நேரம், கழிந்த விதம் பற்றி விளக்குக.

V. பிள்ளையை அழைத்து 1 தொடக்கம் 100 வரை எண்களை பிழையில்லாது தொடரொழுங்கில் எண்ணச் செய்து, செலவழிந்த காலத்தைக் குறித்துக் கொள்க. மற்றைய பிள்ளையையும் அவ்வாறே எண்ணச் செய்து, யார் குறைந்தளவு நேரத்தில் எண்ணி முடிந்தார் எனவும், கூடிய நேரம் எடுத்தவர் யார் எனவும் பிள்ளை அறிந்து கொள்ள வழிப்படுத்துங்கள்.
   - ❖ செயல்நூலிலுள்ள பயிற்சிகளை வழங்குக.